மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியில் உள்ள ஒரு சிறப்பு அம்சம் நிதி உதவி பெறுவதில், இந்தத் துறை மூலம் எத்திட்டங்களை நாம் உருவாக்கினாலும் அரசுதான் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கிறகிறது, ஆனால் ஒரு வாரியம் இருக்குமேயானால் உலக வங்கியிடமிருந்தோ அல்லது வேறு வங்கிகளிடமிருந்தோ உதவி பெற்று அது ஒரு கமர்ஷீயல் வெஞ்சராக இருக்கவேண்டும் என்று அந்தக் கருத்தை உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். அது ஒரு நல்ல கருத்து. அரசு அதை நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

திரு. இல. பலராமன்: உலக வங்கி மூலம் வாங்கக் கூடிய கடன்கள் மூலம் நவீனப்படுத்தும் ஏரிகளில் என்னென்ன காரியங்களுக்காக அரசு அதைப் பயன்படுத்தியிருக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: உலக வங்கி உதவி செய்கிறபோது சில நிபந்தனைகளைச் சொல்கிறார்கள். அது குறித்து நம் பாரதப் பிரதமர் அவர்கள் கூட ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். உதவி செய்கிறபோது சொல்கிற அந்த நிபந்தனைகளில் அரசியல், சமூகப் பார்வைகள் கலந்து விடக்கூடாது என்று. உலக வங்கி இந்த நவீனப்படுத்தும் திட்டத்தில் முதலில் 25 ஏக்கருக்குக் குறையாமல் ஒரு யூனிட்டாக எடுத்துக் கொண்டு நவீப்படுத்தவேண்டும் என்று சொல்கிறார்கள். அது உடைமையாளர்களுக்கு சாதகமாக இருக்குமே தவிர சிறு நிலம் வைத்திருக்கக்கூடிய ஏழை விவசாயிகளுக்கு அது சாதகமாக இருக்காது. இதில் மண்வளம், போன்ற அடிப்படை கொள்கைப் பிரச்னை இருக்கிறது. இருந்தாலும் கூட முன்னோடித் திட்டம் என்ற பெயரால் 25 ஏக்கர் ஒரே யூனிட்டாக இல்லாவிட்டாலும்கூட அந்தந்த உடைமையாளர்கள் உரிமையைபாதிக்காத அளவிற்கு அந்த நவீனப்படுத்துகிற நிலைமைக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதோடு சிறிய கால்வாயாக இருந்தாலும்கூட காரை பூசி நவீனப்படுத்தி அந்தத் தண்ணீரை கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்று நிபந்தனையில் சொல்லியிருக்கிறார்கள். அதைதான் இப்போது பரீட்சார்த்தமாகச் செய்து கொண்டிருக்கிறோம் அது வெற்றிகரமாக இருந்தால் அத்திட்டத்தின் அடிப்படையில் நாம் கடன் உதவி பெற முயற்சி செய்வோம்.

விளாத்தி குளத்தில் நூற்பாலை ஏற்படுத்துதல்

*வினா எண்.529—திரு. ரா. கு பெருமாள்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியைச்சேர்ந்த வைப்பார், கீழ் வைப்பார், பொதுமக்கள் அரசு நூற்புஆலை அமைத்து வேலை வாய்ப்பு ஏற்படுத்த நூறு ஏக்கர் நிலமும்' பங்குத் தொகை ரூபாய் ஒருலட்சமும் இனாமாக கொடுக்க முன் வந்தும் இதுவரை அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணம் என்ன?

1982 மார்ச் 17]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அரசு நூற்பாலை அமைக்கப்படும்?

மாண்புமிகுதிரு. எஸ். திருநாவுக்கரசு: (அ)மற்றும்(ஆ) கீழ் வைப்பார் கிராமத்தில் உள்ள சில நபர்களிடம் இருந்து அரசுக்கு வந்துள்ள மனுவில் கிராம சமுதாயப் பொதுக்காடான 193 ஏக்கர் 83 செண்ட் நிலத்தை அரசு ஏற்று நூற்பாலை அமைத்துத் தரும்படி வேண்டியுள்ளனர்.

கூட்டுறவு நூற்பாலைகளே இல்லாத மாவட்டங்களில் மட்டுமே கூட்டுறவு நூற்பாலைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. நெல்லை மாவட்டத்தில் ஏற்கனவே இரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. மேலும் எட்டையபுரத்தில் பாரதியார் பெயரால் இன்னும் ஒரு நூற்பாலை அமைய இருக்கின்றது. ஆகவே கீழ் வைப்பார் கிராமத்தில் மேலும் அதிகப்படியாக ஒரு நூற்பாலை அமைப்பதற்கு வழியில்லை.

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் விளாத்திக்குளம் தாலுகாவை தமிழக அரசின் புரட்சித் தலைவர் அவர்கள் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவித்து, ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிறது. அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தால், அரசு இதற்கு வேறு ஏதாவது மாற்றுருழி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலை அங்கே இல்லை.

திரு ரா. கு. பெருமாள்; தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலை இல்லாவிட்டாலும்கூட, ஒரு ஆயிரம் பேர்களுக்கு வேலை தருகின்ற வகையிலே சிப்காட் மூலம் ஒரு இன்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்சை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எஸ் திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே] மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

Geological Survey of Firest Lands and Hill tracts

*Q. No. 530 THIRU P. VENKATASUBRAMANIAN; Wll the Hon. theMinister fo Industries be pleased to state

Whether the Government hav conducted any Geologcial survey of the forest lands and hilly tracts in the State

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: ஆம் இந்திய புவியியல் ஆய்வுக் கழகம் தமிழ்நாட்டின் வன மற்றும் மலைப் பகுதிகளிலும் பொதுவான புவியியல் வரைப்பட ஆய்வுகளை மேற்கொண்டது. இத்துடன் தமிழ்நாடு மாநில புவியியல் பிரிவும் மாநிலத்தின் வன மற்றும் மலைப்பகுதிகளிலும் கனிம வளங்களை மதிப்பீடு செய்வதற்கான ஆய்வுகளை செய்தது.